

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2023) கொளத்தூர் ரெட்டேரி 200 அடி சாலையில் அமைந்துள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் நீர் பகிர்மான நிலையத்தில், ரெட்டேரியில் உள்ள நீரினை சுத்திகரித்து குடிநீராக்கும் திட்டத்தின் கீழ், 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 1 கோடி லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 6000 பேருக்கு வேலைவாய்ப்பு: ரூ 1600 கோடி முதலீட்டில்

# மொபைல் உதிரி பாகத் தயாரிப்பு தொழிற்சாலை!

## ஃபாக்ஸ்கான் நிறுவனத்துடனான புரிந்துணர்வு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.1–

ஃபாக்ஸ்கான் நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 6000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 1600 கோடி ரூபாய் முதலீட்டில் மொபைல் உதிரிபாகத் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :

**ஃபாக்ஸ்கான் குழுமத் தலைவர் யங் லியு அவர்களையும் அவரது அணியினரையும் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.**

**தமிழ்நாட்டில் தொடங்க சாத்தியமுள்ள பல்வேறு முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்தோசிக்கப்பட்டது. 6000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 1600 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொபைல் உதிரிபாகத் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் எனது முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மின் வாகனங்கள் மற்றும் மின்னணு உதிரிபாகங்கள் துறை சார்ந்த முதலீடுகள் குறித்தும் கலந்தாலோசித்தோம்.**


**மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் துறையில் ஆசியாவின் புதிய உற்பத்தி மையமாகத் தமிழ்நாட்டை உயர்த்தும் நம் இலட்சியத்தின் மற்றுமொரு மைல் கல்லாக இச்சந்திப்பு அமைந்தது.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### திருப்போரூர் வடக்கு-தெற்கு ஒன்றியம்-பேரூரில் நாளை -

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கிராமம் கிராமமாகச் சென்று கழகக் கொடியேற்றி மக்களைச் சந்திக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிக்கை!



திருப்போரூர்,ஆக.1-

திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூரில் நாளை ஆகஸ்ட் 2-ஆம் தேதி அன்று கிராமம் கிராமமாகச் சென்று கழக கொடி கொடியேற்றி மக்களை சந்திக்கிறார் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூரில் நாளை ஆகஸ்ட் 2-ஆம் தேதி புதன் கிழமை அன்று கிராமம் கிராமமாகச் சென்று கழக கொடியேற்றி மக்களை சந்திக்கிறார்.

திருப்போரூர் தெற்கு ஒன்றியம் மானாம்பதி கிராமத்தில் நாளை ஆகஸ்ட் 2-ஆம் தேதி அன்று பகல் 1.00 மணி அளவில் கொடியேற்று விழா நிகழ்ச்சியை தொடங்கி கழக கொடியேற்றுகிறார். பகல் 1.30 மணிக்கு குயில் குப்பத்தில் கொடியேற்றுகிறார்.

மாலை 3.30 மணி அளவில் திருப்போரூர் பேரூர் அரசு மருத்துவமனை எதிரிலும், மாலை 4 மணியளவில் இள்ளலூரிலும், மாலை 4.15 மணியளவில் வெண்பேடு கிராமத்திலும், மாலை 4.30 மணியளவில் காயாரிலும், மாலை 4.45 காயார் காலனியிலும்,

மாலை 5.00 மணியளவில் பனங்காட்டுப்பாக்கத்திலும், மாலை 5.30 மணியளவில் கொளத்தூரிலும், மாலை 6.00 மணியளவில் சோலையூரிலும், மாலை 6.15 மணியளவில் வெளிச்சையிலும், மாலை 6.30 மணியளவில் கேளம்பாக்கத்திலும், மாலை 7.00 மணியளவில் தையூரிலும் கொடியேற்று வைக்கிறார்.

ஆக மொத்தம், 13 இடங்களில் கிராமம் கிராமமாக சென்று கொடியேற்று விழா நிகழ்ச்சியில் பங்கேற்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வழிநெடுகிலும் உள்ள கிராமங்களில் மக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்று அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் முதல் முறையாக கிராமம் கிராமமாக சென்று கொடியேற்று விழா நிகழ்ச்சியில் பங்கேற்று கொடியேற்ற வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூரில் உள்ள ஒட்டுமொத்த கழக நிர்வாகிகளும் வழிநெடுக கழகக் கொடி தோரணங்களை அழகுற கட்டி வரவேற்பு பதாகைகளையும் கழகக் கொடிகளையும் தங்களது கரங்களில் ஏந்தி நின்று எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தா.மோ. அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### மணிப்பூர் மனித படுகொலைகள் - மகளிர் மானபங்கம்

# மோடி அரசை கண்டித்து நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்!

## விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் அறிவிப்பு!



மணப்பாறை, ஆக.1

மணப்பாறை சிவில் பொறியாளர்கள் சங்க நிகழ்ச்சி உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக திருச்சிக்கு வருகை தந்த தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் தலைவரும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய தலைவருமான பொன்குமார் பத்திரிகையாளரை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மணிப்பூர் மாநிலத்தில் மக்கள் படுகொலை நாள் தோறும் நடந்து கொண்டிருக்கின்றது. இது வரை 200-க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு, முழு நிர்வாணமாக வீதிகளில் அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். இது உலக மக்கள் மத்தியில் இந்தியாவை தலைகுனிய செய்துள்ளது. இந்த கொடூர சம்பவத்தைப் பற்றி சிந்திக்கவோ, பேசவோ, மணிப்பூர் மாநிலத்தில் அமைதி ஏற்படுத்துவதோ பிரதமர் மோடிக்கும், அமித்ஷாவிற்கும் நேரமில்லை.

ஆனால் அமித்ஷா டெல்லியிலிருந்து தனி விமானம் மூலம் தமிழகத்துக்கு வந்து அண்ணாமலை நடத்தக்கூடிய பாதயாத்திரையைத் தொடங்கி வைக்க வந்திருக்கிறார். மணிப்பூரில் கலவரத்தையும், மக்கள் படுகொலையையும் கட்டுப்படுத்துவதற்கு நேரம் ஒதுக்க முடியாத அமித்ஷாக்கு, பாரதிய ஜனதா கட்சி நடத்தக்கூடிய பாதயாத்திரைக்கு வருவது என்பது எவ்வளவு மோசமான அரசியல் என்பதை மக்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

அண்ணாமலை நடத்தக்கூடிய பாதயாத்திரை தமிழ்நாட்டில் ஏதோ மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்பது போல பூதாகரமாகப் பார்க்கிறார்கள். ராகுல் காந்தி, அத்வானி, வைகோ போன்றவர்கள் பாதயாத்திரை நடத்தினார்கள் என்றால், அவர்களைப்போல் நாங்களும் பாதயாத்திரை நடத்துவோம் என்று சொன்னால் புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொள்ளும் கதையாகிவிடும். அண்ணாமலை உண்மையான ஆண்மகனாக இருந்தால் பிரதமர் மோடியை வரும் நாடாளுமன்ற தேர்தலில் இராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட வைக்க வேண்டும். அப்போது தான் தமிழ்நாட்டின் மக்களின் உணர்வு, தமிழ் மண்ணின் சாயம் என்னவென்று பாரதிய ஜனதா கட்சிக்கு தெரியவரும். தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக பா.ஜ.க.வினர் மேற்கொண்டு வரும் பம்மாத்து வேலைகள் தமிழ் மண்ணில் எடுபடாது.

மணிப்பூரில் நடக்கும் கொடுமைகளையும், அதனை வேடிக்கைப்பார்க்கும் ஒன்றிய அரசையும் கண்டித்து தமிழகம் முழுவதும் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம். முதல் கட்டமாக வருகிற 10-ஆம் தேதி திருச்சியிலும், அடுத்து கோயம்புத்தூர், மயிலாடுதுறை, சென்னை ஆகிய மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடத்தப்படும் என பொன்குமார் தெரிவித்தார்.

### வீ.கண்ணதாசன் – கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி.சங்கர் துவக்கி வைத்தனர்!

# எண்ணூரில் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமை!

சென்னை, ஆக. 1 -

எண்ணூரில் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டு துறை அமைச்சரும் மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி எண்ணூர் மார்க்கெட் பகுதியில் தி.மு.க. சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் நடைபெற்றது.

பேரணியை மனித உரிமை ஆணைய உறுப்பினர் - வழக்கறிஞர் வீ.கண்ணதாசன் , வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, திருவெற்றியூர் சட்ட மன்ற உறுப்பினர் கே.பி.சங்கர்., மேற்கு பகுதி செயலாளர் வை.மா.அருள்தாசன், திரைப்பட நடிகர் எம். எஸ். பாஸ்கர் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் ஸ்டான்லி மருத்துவமனை பேராசிரியர் டாக்டர் எஸ். பால சுப்பிரமணியன், திருவொற்றியூர் டாக்டர் செல்வராஜ் குமார், சமூக ஆர்வலர் கருன்ராமன், பாலம் இருளப்பன் ஆகியோர் போதைப்பொருள் குறித்து விழிப்புணர்வை பள்ளி மாணவ - மாணவியர்களிடம் உரையாற்றினர்.

இதைத்தொடர்ந்து மயிலாட்டம் , சிலம்பாட்டம், (Mime show) ஊமை நடனம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர் இதைத்தொடர்ந்து பள்ளி மாணவ-மாணவியர்கள் போதை பொருள் எதிர்ப்பு பதாகைகள் ஏந்தி ஊர்வலமாக சென்று பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். விழிப்புணர் நிகழ்ச்சியல் கலந்து கொண்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஐந்தாவது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார், 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் மு.சிவகுமார், தலைமை கழக பேச்சாளர் வாசு கருணாநிதி மற்றும் கத்திவாக்கம் அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் எண்ணூரில் உள்ள அணைத்து கிராம சங்கங்கள் மற்றும் கழக நிர்வாகி கள், கழக உடன்பிறப்புகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், பள்ளி மாணவ - மாணவியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருநின்றவூர் நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# திடக்கழிவு சேகரிப்பு வாகனம் மற்றும் புதிய சாலை அமைக்கும் பணிகள்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் ஆக. 01;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதி குட்பட்ட ஆவடி அடுத்த திருநின்றவூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு மேம்பாட்டு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.. இதனிடையே கடந்த 10 ஆண்டுகளாக திடக்கழிவுகளை மூன்று சக்கர மிதிவண்டி மூலமாக சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.. இந்த நிலையில் தேர்தல் வாக்குறுதிகளாக மேம்படுத்தல் பணிகள் நிறைவேற்றும் விதமாக பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 40 லட்சம் மதிப்பீட்டில் 13 மின் இயங்கு வாகனம் மற்றும் 2 இலகுரக வாகனங்களை திருநின்றவூர் நகராட்சி பயன்பாட்டிற்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கலைஞர் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 14வது திருவேங்கடநகர் முதல் மெயின் ரோட்டில் சாலை 3.5 கிலோமீட்டர் 2 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணிகளை துவக்க விழாவும் நடைபெற்றது ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சாலை அமைக்க பணிகளை துவக்கி வைத்தார்

இந்நிகழ்ச்சியில் திருநின்றவூர் நகர மன்ற தலைவர் உஷாராணிரவி, நகரச் செயலாளர் தி.வை.ரவி, துணை தலைவர் சரளா நாகராஜ், நகராட்சி ஆணையர் புகேந்தரி, பொறியாளர் ருத்ரா கோட்டி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், மாநில மாணவர் அணி இணை செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுகுத்தகை கே. சுரேஷ்குமார், நகர கழக நிர்வாகிகள் ஜெ.அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், தெ.நாகராஜ், ஆர்.ரவி, ச.பாபு, சீ.குணசேகரன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தியாகராஜன், பொறியாளர் அணி அமைப்பாளர் நடுகுத்தகை எம்.மோகன், தலைமை கழக பேச்சாளர் தங்கமணி, அணிகளின் நிர்வாகிகள் அக்கி மா.செ. ராஜேஷ், மு.சரத்குமார், பி.எல்.ஆர்.ராஜேஷ், வார்டு செயலாளர்கள் கவுன்சிலர்கள் கோட்டீஸ்வரன், அசோக்குமார், தங்கராஜ், சரவணன், ஏகாம்பரம், சலீம், மோகனகிருஷ்ணன், பால்ராஜ், வெங்கடேசன், மாதவன், மகேஷ்குமார், மேகநாதன், செந்தில்வேல், ரவிச்சந்திரன், ஜீவானந்தன், பாபு, ராதா, உஷாராணி வெங்டேசன், சந்தோஷ்குமார், சாந்தி பாபு, ஸ்ரீதேவி, கிருஷ்ணன், சுரேஷ்குமார், ஜெயக்குமார், தெய்வசிகாமணி, முனிரத்தினம், பிரவீன்குமார், பிரசன்னா, பட்டானி கார்த்தி உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி எண்ணூர் மார்க்கெட்டில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் நடைபெற்றது. பேரணியை மனித உரிமை ஆணைய உறுப்பினர் வீ.கண்ணதாசன் - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., வை.மா.அருள்தாசன், நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் பள்ளி மாணவ - மாணவியர், மாமன்ற உறுப்பினர்கள், ஆசிரியப் பெருமக்கள், மருத்துவர்கள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச.

# காஞ்சிபுரம் மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. காஞ்சிபுரம் மண்டலத்தின் (பதிவு எண்.2148/MDS, பேரவை இணைப்பு எண். 707) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 30.07.2023 அன்று பேரவைச் செயலாளர் கோ.சி.வள்ளுவன் தேர்தல் ஆணை யாளராகவும், தலைமைக் கழகப் பார்வையாளர் வழக்கறிஞர் அ.சரவணன் ஆலோசனையின் பேரிலும் நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

| | |
|---|---|
| தலைவர் | - எம்.சுதாகரன் |
| துணைத் தலைவர்கள் | - 1) எல்.முனிரத்தினம், 2) கே.சுந்தரமூர்த்தி 3) என்.ஸ்ரீதர் |
| பொதுச்செயலாளர் | - கே.ரவி |
| துணைச்செயலாளர்கள் | - 1) ஆர்.தினகரன் 2) டி.ஞானவேல் 3) எம்.டி.ராஜேந்திரன் |
| தலைமை நிலையச் செயலாளர் | - என்.அரிதாஸ் |
| அமைப்புச் செயலாளர் | - ஜி.டில்லிபாபு |
| பிரச்சார செயலாளர் | - எஸ்.பழனி |
| துணைச் செயலாளர் | - எம்.சாரங்கன் |
| பொருளாளர் | - ஏ.முரளி |

**மு.சண்முகம் எம்.பி.**
பொதுச் செயலாளர், தொ.மு.ச. பேரவை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மு. சின்னசாமி
### ஆகஸ்ட் 1 (1979)





**தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1967ல் ஈரோடு தொகுதியிலும், 1971ல் மொடக்குறிச்சி தொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**ஈரோடு, ஆப்பக்கூடலில் 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி தலைவர் கலைஞர் கலந்து கொண்ட கூட்டத்தில் திடீரென்று சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை கொட்டியதால் பந்தல் மேடை சரிந்து விழுந்ததோடு, மின்சாரமும் தடைபட்டு என்ன நடக்கிறது என்று தெரியாத நிலை ஏற்பட்டபோது, தலைவரை தனது தோளில் தூக்கிக் கொண்டு காருக்கு சென்று சேர்த்தார்.**

**இந்நிகழ்வை தலைவர் கலைஞர் தனது 'நெஞ்சுக்கு நீதி' நூலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**